R4874

# IN A DEN OF LIONS
# சிங்கத்தின் குகையில்

"கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களை சூழப் பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். " சங்கீதம் 34:7

இந்த பாடத்தின் காலத்தில் தானியேல் வயதானவராக இருந்தார். அவரை நம்பிக் கொடுத்த அரசாங்க வேலையில் நீண்ட காலம் புத்திசாலியாகவும் உண்மையுள்ளவராகவும் ஊழியம் செய்தார். அவர் பாபிலோனிய ராஜ்யத்தின் அழிவை கண்டிருந்தார். அதன் இடத்தில் மேதோபெர்சிய ராஜ்யம் வந்தது. இவர்களும் தானியேலின் நல்ல குணத்தை அங்கீகரித்தார்கள். கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பது, அரசாங்க ஊழியத்தில் உண்மைத்தன்மை மற்றும் நீதியின் கொள்கைகளுக்கும் தேவனுக்கும் கீழ்ப்படிதல் போன்றவை. புதிய உலக பேரரசு நூற்றி இருபது மாகாணங்களாக பிரிக்கப்பட்டு நூற்றி இருபது கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு மேல் மூன்று பிரதானிகள் ஏற்படுத்தப்பட்டார்கள். இந்த பிரதானிகளுக்கு மேல் தரியு ராஜாவும் அவனுக்கும் மேலாக சக்கரவர்த்தி கோரேசும் இருந்தார்கள். தானியேல் அவருடைய திறமை மற்றும் நேர்மையினால் மூன்று பிரதானிகளில் ஒருவராக இருந்தார்.

இந்த உயர்ந்த, அர்ப்பணம் செய்த யூதருக்கு எப்படிப்பட்ட பாராட்டு கொடுக்கப்பட்டுள்ளது! கடந்த கால ஆட்சியாளர்களின் மனதில் அவரது திறமை எந்த அளவுக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது! இப்படிப்பட்ட நன்மதிப்பும் அதிகாரமும் உடையவரை அவர்கள் விரும்பியது உலக ஆளுகையை பொருத்தவரை அவர்களது உயர்ந்த நோக்கத்தை காண்பிப்பதாக இருந்தது. உண்மையிலேயே அநேக உயர்ந்த குணமுடையவர்களிடத்தில் இது உண்மையாக இருக்கிறது என்று நாம் நம்புகிறோம். தற்கால மன்னர்கள் தங்கள் மக்களில் திறமையுள்ளவர்களிடத்தில் அரசாங்கத்தை நிர்வகிக்கும்படி கொடுக்கிறார்கள்.

மேசியாவின் ராஜ்யத்தை குறிப்பிடும் போது, அதில் மானிட அரசாங்கத்தை நிர்வகிப்பது பூரணர்கள் மாத்திரமல்ல, அது தெய்வீக வல்லமையால் ஆதரிக்கப்படும். அதற்கு முன்பு முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும். (பிலிப்பியர் 2:10,11)

## தானியேல் மேல் பொறாமை

கடந்த கால மற்றும் தற்கால கிழக்கத்திய தேசங்களின் அரசாங்கங்கள் நேர்மையற்றதாக, தற்காலத்தில் "லஞ்சம்" என்று குறிப்பிடப்படுகிறவைகளாக இருந்திருக்கின்றன என்று நாம் அறிவோம். உதாரணத்திற்கு: சீனா-ஜப்பான் போரில் பீரங்கி மற்றும் யுத்த தளவாடங்களுக்கான ஒப்பந்தங்கள் அரசாங்க அதிகாரிகளுக்கு நெருக்கமானவர்களுக்கு கொடுக்கப்பட்டன. அங்கே மிகவும் அவமானகரமான நேர்மையின்மை செயல்படுத்தப்பட்டது. உதாரணத்திற்கு மர பீரங்கிகள் வழங்கப்பட்டன. தரமான பொருளுக்கு கொடுக்கப்பட்ட பணம் அரசாங்கத்துக்கு பயன்படுத்தப்படாமல் திருடர்களுக்கு வழங்க பயன்படுத்தப்பட்டது. ஒரு மாபெரும் பேரரசில் மூன்று பிரதானிகளில் ஒருவராக இருந்த தானியேலைப் போன்ற ஒருவர், லஞ்ச லாவண்யங்களுக்கு எதிராக மற்றவர்களுக்கு தடையாக இருந்திருப்பார். அவரை அதிலிருந்து அகற்ற முடியாது என்பதை உணர்ந்து அவரிடத்தில் அவர்கள் குற்றம் கண்டுபிடித்து அவரை நீக்குவது தான் முதல்படியாக இருந்தது. ஆனால் மனிதனுடைய நேர்மை மற்றும் விசுவாசம் பொதுவாக இந்த திசையில் நம்பிக்கை தராது.

கடைசியாக ஒரு திட்டம் தீட்டப்பட்டது, அவர்கள் தானியேலின் வாழ்க்கை தெய்வ பக்தியை அடிப்படையாக கொண்டது என்பதை அறிவார்கள். தானியேலை அவரது தேவனைப் பற்றிய வேத விஷயத்தில் குற்றம் கண்டுபிடித்தால் ஒழிய வேறு எதிலும் குற்றம் கண்டுபிடிக்க முடியாது என்று அவர்கள் அறிந்தார்கள். தரியு ராஜா, மற்ற மனிதர்களைப் போல முகஸ்துதி மூலம் நெருங்கக்கூடியவராக இருந்தான். கிழக்கத்திய தேசங்களில் ராஜா மதங்களுடன் மிகவும் ஒன்றித்து இருப்பது வழக்கமாக இருந்தது. அவன் தனது தேவனுக்கு மிகவும் பிரியமானவனாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த உயர்ந்த பதவிக்கு அவன் வந்திருக்க முடியாது என்று நினைத்தான்.

இந்த கோட்பாட்டின்படி, உயர்ந்த பதவியில் இருந்த (பிரதானிகள் மற்றும் தேசாதிபதிகள்) சதிகாரர்கள், ராஜ்யத்தை பலப்படுத்தி ஒன்றுப்படுத்த ஒரு திட்டத்துடன் ராஜாவை அணுகினார்கள். அந்த திட்டம் இதுதான்: ஒரு மாதம் வரை யாரும் ராஜாவைத் தவிர அவர்களது தேவன் அல்லது தேவர்களிடமோ விண்ணப்பம் பண்ணக்கூடாது. இந்த காரியம் ராஜாவைப் பற்றிய ஒரு உயர்ந்த எண்ணம் மக்கள் மனதிலே ஏற்படும் என்பது அவர்களது கூற்றாக இருந்தது. தரியு ராஜா இதை ஏற்றுக்கொண்டு கட்டளை கொடுத்தான். தானியேலின் நிலைமை என்ன என்பதை குறித்து ஒரு கணம் கூட நினைத்து பார்க்கவில்லை. அவனது பிரதானிகள், தானியேலை கண்ணியில் சிக்க வைத்து மிகவும் நம்பிக்கை உடைய அதிகாரியை சட்டப்படி மரண தண்டனைக்குள்ளாக்க நாடுகிறார்கள் என்று ஒரு கணம் கூட நினைத்துப் பார்க்கவில்லை.

## அனுதினமும் மூன்று வேளை ஜெபித்தார்

தானியேல் இந்த கட்டளையை கேள்விப்பட்டார். ஆனால் வழக்கம் போல் அவர் தனது வீட்டிற்குள்ளே சென்று, பலகனியை எருசலேமை நோக்கி திறந்து வைத்து மூன்று முறை ஜெபித்தார். காலை, மதியம் மற்றும் இரவு மூன்று வேளையும் தேவனுடன் தான் அர்ப்பணம் செய்ததையும், பரிசுத்த தேசத்தைக் குறித்த கிருபையான வாக்குத்தத்தங்களை மனதிற்கு கொண்டு வந்து, அது முழு உலகத்தின் மையமாக ஆக வேண்டும் என்பதையும் பரிசுத்த ஜனங்களாக ஆக வேண்டும் என்பதையும் நினைவு கூர்ந்தார். முடிவாக இவர்கள் மூலமாக தெய்வீக ஆசீர்வாதங்கள் சகல ஜாதிகளுக்கும், கோத்திரங்களுக்கும் ஜனங்களுக்கும் பாஷைக்காரருக்கும் விரிவுப்படுத்தப்படும் என்பதையும் நினைவு கூர்ந்தார்.

அறுவடை சமயத்தில் அரிவாள்களை கூர்மைப்படுத்துவதில் நேரமோ அல்லது சக்தியோ வீணாகாது என்று யாரோ குறிப்பிட்டது போல ஜெபத்தில் நேரத்தை செலவிடுவது வாழ்க்கையின் காரியங்களில் நஷ்டமில்லை. தானியேலைப் போல மண்டியிட்டு முறையாக தொடர்ந்து ஜெபிக்கிற புருஷனோ அல்லது ஸ்திரீயோ உலகில் சிறந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்படியாக உலக காரியங்களிலிருந்து எடுக்கப்பட்ட தருணங்கள் நல்லவிதமாக பயன்படுத்தப்பட்டு ஏற்ற ஆசீர்வாதத்திற்கு மேலானதை தொழுகை செய்கிறவர்கள் மேல் கொண்டு வரும். இதுதான் அவன் செய்ய வேண்டியது. ஜெபத்தை புறக்கணித்து ஒரு அர்ப்பணம் பண்ணப்பட்ட வாழ்க்கையை வாழ்வது இயலாத காரியம். ஜெபிக்க நேரம் இல்லாமல் தானியேல் என்ன பண்ணுவார்! அந்த புறஜாதியார் தேசத்தில் தேவனுடனான அவருடைய விசுவாசம் எப்படி நீடித்திருக்கும்? கோட்பாடுகளுக்கான அவரது விசுவாசம் ஊழல்களுக்கிடையே எப்படி பராமரிக்கப்படும்? அது அவருடைய சிருஷ்டிகருடனான ஐக்கியமாக இருந்திருக்குமா? “நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்” என்பதை உணர்வதின் மூலம் கிறிஸ்தவர்களுக்கு இந்த சலுகை இன்னும் அதிகரிக்கும். இந்த பரிகாரியின் நாமத்தில் இரக்கத்தை பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டையில் நாம் சேரலாம். (எபிரேயர் 4:16)

## யேகோவா தேவன் தமது தூதனை அனுப்பினார்

சதிகாரர்கள் தானியேலை தேடினார்கள். சாட்சிகளை சாட்சி கூற தயார்படுத்தினார்கள். தானியேல் ஏதாவது தவறு செய்திருப்பார் என்று அல்ல. ஆனால் ராஜா சிக்குண்டு ஏற்படுத்தி, கையெழுத்திட்ட அரசாணையை அவர் மீறியிருந்தார் என்பதற்காக ஆகும். இந்த காரியம் ராஜாவிடம் கொண்டுபோகப்பட்டது. ஒருமுறை கையெழுத்து போட்டு முத்திரையிட்ட அரசாணை மாற்றப்படக்கூடாது என்கிற கொள்கையும் ராஜாவிடம் ஞாபகப்படுத்தப்பட்டது. தரியு ராஜா தன் கண்ணியில் சிக்கி தன் கால்களை தானே கட்டிக் கொண்டதை உணர்ந்தான். அவனது அரசாணையின் விளைவை தவிர்க்க நாள் முழுவதும் முயற்சி செய்து எதையும் செய்ய முடியவில்லை. அவன் காரியத்தை தானியேலிடம் விவரித்துக் கூறி, அவர் விசுவாசிக்கிற தேவன் அவரை விடுவிப்பார் என்று உறுதிப்பட கூறினான். தானியேலின் வாழ்க்கையில் அவரது நேர்மைக்கான சாட்சியம் எப்படிப்பட்டதாயிருக்கிறது!

தானியேல் சிங்கக் கெபியில் போடப்பட்டு அதன் வாசலில் கல்லை வைத்து மூடி ராஜா அதில் தன் முத்திரையையும் கையெழுத்தையும் போட்டான். ராஜா இரவு முழுவதும் நித்திரை பண்ணாமல் மனவேதனையில் இருந்தான் என்று நாம் அறிவிக்கப்படுகிறோம். அவனது உண்மையுள்ள அதிகாரியை அநியாயமாக நடத்தப்பட்டதையே நினைத்துக் கொண்டிருந்தான். ராஜா இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் இருந்து அதிகாலையில் எழுந்திருந்து தானியேல் உயிரோடு இருக்கிறாரா அல்லது இல்லையா என்பதை அறிய தானியேலிடம் சென்றான். தானியேல் உயிரோடு இருக்கிறார் என்பதையும், அவருடைய தேவன் தமது தூதனை அனுப்பி சிங்கத்தின் வாயை கட்டிப்போட்டார் என்பதையும் அறிந்து மிகவும் சந்தோஷமடைந்தான். தானியேல் உடனே கெபியிலிருந்து தூக்கிவிடப்பட்டார்.! தானியேல் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டார்! அவரது தேவனும் நீதியானவர்! ராஜா இப்பொழுது இன்னொரு அரசாணையை ஏற்படுத்தினான். அதாவது ஒரு உண்மையான மனிதனை அழிக்க நாடின அந்த தேசாதிபதிகளை கொண்டு வரச்சொல்லி அதே சிங்கங்களின் கெபியில் போடச்சொன்னான். அழிவு தான் அவர்கள் முடிவாக இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டது.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தானியேலைப் போல உலகத்தின் தரநிலையைக் காட்டிலும் மேலாக வாழ வேண்டும். அவர்கள் மேல் எதிரிகள் எந்த குற்றமும் காண முடியாதபடி இருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் ஆராதிக்கிற தேவன் உண்மையான தேவன்.